**<u>இடைப்பாடி நகராட்சி</u>**

**<u>நகரமன்ற அவசரக்கூட்டம்</u>**

**<u>நகர் மன்ற தலைவர் அவர்களால்  கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் தேதி திங்கள்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இடைப்பாடி நகரமன்றத்தின் அவசரக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்திருக்கும் தலைவர் திரு.ஆர்.கோவிந்தக்கவுண்டர் அவர்களின் கூட்ட அரங்கத்தில் உள்ள தலைவர் திரு.கே.மாரிமுத்துபக்தர் அவர்களின் நினைவு கூடத்தில் இடைப்பாடி நகரமன்ற தலைவர் திரு.D.S.M. பாஷா ஆகிய எனது தலைமையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் குறித்து நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்,
இடைப்பாடி நகர்மன்றம்.

**பொருள்.1**

சொத்துவரி மற்றும் காலிமனைவரி ஆகியவற்றினை 01.04.2022 முதல் வரி உயர்வு செய்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, அரசாணை எண்.52, நாள்.30.03.2022 அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள்.2**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15—ஆவது மத்திய நிதி ஆணையம், 2022—2023—ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019—ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

<u>காலிமனை வரி சீராய்வு:</u>

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>

ஏற்கனவே உள்ள சொத்துவரி மற்றும் காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் இடைப்பாடி நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி **(Current Liabilities)** (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 3.75 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.63 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 6.71 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | 0.64 |
| | மொத்தம் | 11.73 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், இடைப்பாடி நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி மற்றும் காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | தற்போதைய மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு | புதியதாக நிர்ணயம் செய்யப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு (ரூ.) ஒரு சதுர அடிக்கு |
| | | | <u>குடியிருப்பு</u> | | |
| 1 | A | **1.55** | 0 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.94 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.50 | 2.32 |
| | | | 1201 முதல் 1800 சஅ.அடி.வரை | 1.75 | 2.71 |
| | | | 1801க்கும் மேல் | 2.00 | 3.10 |
| | | | <u>குடியிருப்பு இல்லாதவை</u> | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 2.71 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 | 3.10 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 2.71 |
| | | | | | |
| | | | <u>குடியிருப்பு</u> | | |
| 2 | B | **1.05** | 0 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.31 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.50 | 1.58 |
| | | | 1201 முதல் 1800 சஅ.அடி.வரை | 1.75 | 1.83 |
| | | | 1801க்கும் மேல் | 2.00 | 2.10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | <u>குடியிருப்பு இல்லாதவை</u> | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 1.83 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 | 2.10 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 1.83 |
| | | | | | |
| 3 | C | **0.65** | <u>குடியிருப்பு</u> | | |
| | | | 0 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 0.81 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.50 | 0.98 |
| | | | 1201 முதல் 1800 ச.அ.அடி.வரை | 1.75 | 1.14 |
| | | | 1801க்கும் மேல் | 2.00 | 1.30 |
| | | | <u>குடியிருப்பு இல்லாதவை</u> | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 1.14 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 | 1.30 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 1.14 |
| | | | | | |
| 4 | D | **0.50** | <u>குடியிருப்பு</u> | | |
| | | | 0 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 0.63 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.50 | 0.75 |
| | | | 1201 முதல் 1800 ச.அ.அடி.வரை | 1.75 | 0.88 |
| | | | 1801க்கும் மேல் | 2.00 | 1.00 |
| | | | <u>குடியிருப்பு இல்லாதவை</u> | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 0.88 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 | 1.00 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 0.88 |

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி மற்றும் காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

இடைப்பாடி நகராட்சி பகுதி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர், நாள்.01.04.2022–ல் தெரிவித்துள்ளவாறு சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு செய்து வரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

நகர்மன்ற தலைவர்
இடைப்பாடி நகராட்சி

****************************************************************************************************

**<u>இடைப்பாடி நகராட்சி</u>**

**<u>நகரமன்ற  சாதாரண கூட்டம்</u>**

**<u>நகர் மன்ற தலைவர் அவர்களால்  கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் தேதி வெள்ளிகிழமை காலை11.00 மணிக்கு இடைப்பாடி நகரமன்றத்தின் சாதாரண கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்திருக்கும் தலைவர் திரு.ஆர்.கோவிந்தக்கவுண்டர் அவர்களின் கூட்ட அரங்கத்தில் உள்ள தலைவர் திரு. கே. மாரிமுத்துபக்தர் அவர்களின் நினைவு கூடத்தில் இடைப்பாடி நகரமன்ற தலைவர் திரு.னு.ளு.ஆ.பாஷா ஆகிய எனது தலைமையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் குறித்து நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்,
இடைப்பாடி நகர்மன்றம்.

****************************************************************************************************

**பொருள் 1**

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.11 ஜலகண்டாபுரம் ரோடு பகுதியில் அமைந்துள்ள இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையை''அன்பின் ஜோதி அறக்கட்டளை'' மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் எரிவாயு தகனமேடையில் கீழ்கண்ட பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் அப்பழுதுகளை சரிசெய்து தருமாறு அறக்கட்ளை மூலம் கோரப்பட்டுள்ளது.

1. எரியூட்டும் இயந்திரத்தில் பிரேதத்தை உள்ளே தள்ளும் Trolly.
2. எரியூட்டும் இயந்திரத்தில் உள்ள LPG Burner புதிதாக மாற்றுதல்.
3. எரியூட்டும் இயந்திரத்தில் உள்ள பிரேதம் பொருத்தும் மேடை (Body Placing Bed fixing costiorm fames)புதிதாக அமைத்தல்.
4. எரியூட்டும் Chamber–ல்லிருந்து புகை சுத்திகரிக்கும் இயந்திரம் வரை (Venturi Scrubber).
5. காற்று வெளியேற்றும் மின்விசிறி (Exhaust Fan).

எனவே, மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 0350 /2022/இ2)**

**பொருள் 2**

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.11 ஜலகண்டாபுரம் ரோடு பகுதியில் அமைந்துள்ள இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையை''அன்பின் ஜோதி அறக்கட்டளை'' மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் எரிவாயு தகனமேடையில் உள்ள புகைபோக்கி (Chimney) பழுதடைந்து கீழே விழுந்துவிட்டதால் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.எனவே, எரிவாயு தகனமேடையில் புதியதாக புகைபோக்கி (Chimney) 30 மீட்டர் உயரத்திற்கு பொருத்த ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 0351 /2022/இ2)**

பொருள் 3

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN52D4129ஈப்பு வாகனத்தின் ஒலி பெருக்கி பழுதடைந்து உள்ளதால் வாகனத்தை இயக்க முடியாததால் புதியதாக ஒலி பெருக்கி மாற்றியது, வீல் அலைன்மேன்ட் சரி செய்தது மற்றும் நகர்மன்ற தலைவர் போர்டு மாற்றியது போன்ற பணிகளை மேற்கொண்டமைக்கு செலவுத் தொகை ரூ.3,970/–யை இந்நகராட்சி ஈப்பு ஓட்டுநர் திரு.பெ.சுப்பரமணி அவர்கள் செலவு செய்யப்பட்டதால் மேற்கண்ட தொகையை திருப்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 367/2022/இ2)**

பொருள்4

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக லாரி எண். TN27V4193 வாகனத்தின் 2022–2023ம் வருடத்திற்கான சாலை வரி தொகை ரூ.7,896/–யை வட்டார போக்குவரத்து அலுவலர், சங்ககரி அலுவலகத்தில் Online மூலம் செலுத்த வேண்டியுள்ளதால் மேற்கண்ட தொகையை குடிநீர் விநியோக லாரி ஓட்டுநர் திரு. ந.நடராஜன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 367/2022/இ2)**

பொருள்5

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் 2022–2023 ம் ஆண்டிற்கு அவ்வப்போது தேவைப்படும் நோட்டீஸ் , பிளக்ஸ் பேனர் , போஸ்டர்கள் மற்றும் கலர் பிரிண்டர்கள் ஆகியவை அச்சடிக்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ3.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 309/2022/எச்1)**

பொருள் 6

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் செயல்படுத்தப்பட்டு வரும் 5 MCC மையங்களில் 2022–2023 ம் ஆண்டிற்கு உரம் தயாரிக்கும் பணிகளுக்கு தேவையான வெள்ளம், தவுடு, தயிர் மற்றும் இதர பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ2.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 312/2022/எச்1)**

பொருள் 7

இடைப்பாடி நகராட்சியில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், தூய்மைபணிமேற்பார்வையாளர்கள் மற்றும் தூய்மைபணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2022–2023ம் ஆண்டுக்கான சீறுடைகள் மற்றும் காலணிகள் , சீருடை தையல் கூலி ஆகியவை வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ7.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 308/2022/எச்1)**

பொருள் 8

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் 2022–2023 ம் ஆண்டிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்புதூள், பினாயில் மற்றும் தளவாட சாமான்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ9.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 306/2022/எச்1)**

பொருள் 9

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் 18 BOV வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் பழுதடைந்த பேட்டரி மற்றும் சார்ஜர்கள் மாற்றவும், பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்க உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி 18 BOV வாகனங்களை பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ5.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 311/2022/எச்1)

பொருள் 10

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2022–2023 ம் ஆண்டிற்கு கொசு புழுக்களை கட்டுபடுத்தும் மருந்துகள் , புகை மருந்து இயந்திரத்திற்கு பயன்படுத்தபபடும் பைரித்தியம் , அபேட் ஆகிய மருந்துகள் பூச்சிகொள்ளி மருந்துகள் மற்றும் நோய் தடுப்பு பணிகளுக்கான நிலவேம்பு பவுடர் , கபசுர குடிநீர் பவுடர் ஆகியன வாங்கவும் , ஸ்பிரேயர் இயந்திரங்கள் மற்றும் புகை மருந்து இயந்திரங்கள் பராமிக்கவும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ10.00லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 313/2022/எச்1)

பொருள்11

இடைப்பாடி நகராட்சி பகுதியில் 2022–2023 ம் ஆண்டிற்கு சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து வைக்க ஏதுவாக சாக்கு பைகள், பேலிங் டேப் மற்றும் கிளிப்கள் வாங்கவும், பேலிங் செய்யப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்ப உத்தேச செலவின தொகை ரூ3.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 314/2022/எச்1)

பொருள்12

இடைப்பாடி நகராட்சி குடிநீர் பிரிவில் 2022–2023ம் ஆண்டிற்கு பூலாம்பட்டி தலைமை குடிநீர் நிலையத்தில் சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் மாதிரி, இந்நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை தொட்டிகளில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் மாதிரி, பிளிச்சிங்பவுடர் மற்றும் படிகாரம் ஆகியவற்றினை 1. Physical Test, 2.Chemical Test மற்றும் 3. Bacteriological Test போன்ற பரிசோதனை மாதம் ஒருமுறை செய்து தரச்சான்றிதழ் பெறுவதுதற்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.75,000/–திற்கு மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 378/2022/இ1)

பொருள்13

இடைப்பாடி நகராட்சிக்கு குடிநீர் பிரிவில் 2022–2023 ஆம் ஆண்டிற்கு 5.00 மெட்ரிக்டன் பிளிச்சிங் பவுடர் தேவைப்படுவதால் அதனை அவ்வப்போது தேவைப்படும் அளவு சப்ளை செய்யும் பணிக்கு (குளோரின் 33%க்கு மேல் இருக்க வேண்டும்) ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்கண்ட பணிகளை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்ற அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 0419 /2022/இ1)

பொருள்14

இடைப்பாடி நகராட்சிக்கு குடிநீர் பிரிவில் 2022–2023 ஆம் ஆண்டிற்கு 10.00 மெட்ரிக்டன் படிகாரம்(ALUM) தேவைப்படுவதால் அதனை அவ்வப்போது தேவைப்படும் அளவு சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்கண்ட பணிகளை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்ற அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்காலம்

**(ந.க.எண் :0420 /2022/இ1)**

<u>பொருள்15</u>

நகராட்சிக்கு அக மற்றும் புற பணியாளர்களுக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள், சொத்துவரி சீராய்வு படிவம் மற்றும் விலை மதிப்பு படிவங்கள் அச்சு ரசீதுகள், அச்சு செய்த படிவங்கள் ஆகியவைகளை 2022–2023ம் ஆண்டிற்கு வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ15.00ந்து லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.787/2020/அ1)**

<u>பொருள்16</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் கட்டப்பட்டுள்ள தற்போது காலியாக உள்ள IGFF திட்ட கடை எண் 15க்கு 17.03.2022ந் தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகள் மட்டும் பெறப்பட்டதன் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடையின் விபரம் | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச ஏலக்கேள்வி ரூ | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | வாரச்சந்தை IGFF திட்ட கடை எண் 15 | திரு.வீ.கொழந்தாகவுண்டர் த/பெ.வீரப்பன், 5–607, செட்டிக்காடு ஆலச்சம்பாளையம்,இடைப்பாடி, | –– | ரூ1800 |
| | வாரச்சந்தை IGFF திட்ட கடை எண் 15 | திரு.கே.நாராயணன், த/பெ.கண்ணுப்பையன், காமராஜ் நகர், வெள்ளாண்டிவலசு, இடைப்பாடி | –– | ரூ1750 |

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்
2. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண் 1ல்குறிப்பிடப்பட்டுள்ள திரு.வீ.கொழுந்தாகவுண்டர் த/பெ வீரப்பன் என்பவரால் வழங்கப்பட்டுள்ள உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்
3. வாரசந்தையில் அமைந்துள்ள இக் கடைக்கு 22 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் இக் கடையினை ஏலம் எடுக்க முன்வரவில்லை . மேலும் இக் கடை அமைந்துள்ள பகுதியானது மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் அமைந்துள்ளதால் போதுமான வியாபரம் இல்லாமல் கடையினை எடுத்தவர்களால் நகராட்சி வசம் திருப்பி ஒப்படைத்து வருவதாலும் , நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளதால் இவ் உச்ச ஏலக் கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
4. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு 12மாத முன் வைப்பு தொகையினை செலுத்த அறிவிப்பு வழங்கியமைக்கும், கடைளினை ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

<u>பொருள்17</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜெ.ஜெ.வணிக வளாக கடை TUFIDCO திட்ட கடை எண்.33,42,43,44,56, மற்றும் 65,66,67,68,70,71,72,74,75,76,80 ஆகிய 16கடைகளுக்கு 17.03.2022ந் தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட கடைகளுக்கு ஏலம் கோர எவரும் முன் வராத நிலையில் கடை எண்.43,56,71,72,79 ஆகிய ஐந்து கடைகளுக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும்முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடையின் விபரம் | உச்சஒப்பந்தப்புள்ளி கேள்விதாரர் பெயர் மற்றும் முகவரி. | தற்போதைய வாடகை. | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை. |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5 |
| 1. | TUFIDCO கடை எண்.43 | திரு.வி.குப்புராஜ் த/பெ.வேம்பாகவுண்டர் 14R1மோட்டூர் காட்டுவளவு, இடைப்பாடி. | ரூ.3620 | ரூ.3750 |
| | TUFIDCO கடை எண்.43 | திருமதி.என்.சசிரேகா பூலாம்பட்டி ரோடு, இடைப்பாடி. | | ரூ.3700 |
| 2. | TUFIDCO கடை எண்.56 | திரு.எஸ்.முத்துபாரதி த/பெ.சேட்டு 5–240,மஞ்சுபள்ளம், வீரப்பம்பாளையம் அஞ்சல், சங்ககிரி, 637301. | ரூ.3600 | ரூ.3700 |
| | TUFIDCO கடை எண்.56 | திரு.அ.ரவிச்சந்திரன் த/பெ.அர்ச்சுணன், 5–96,புட்டமனை, மலங்காடு, வீரப்பம்பாளையம் அஞ்சல், சங்ககிரி 637301. | | ரூ.3400 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | TUFIDCO கடை எண்.71<br><br><br><br>TUFIDCO கடை எண்.71 | திரு.ந.சுகவனேஸ்வரன் த/பெ.நல்லுபக்தர்,<br>74,க.புதூர் பழைய தெரு, இடைப்பாடி.<br><br>திரு.அ.முரளி கிருஷ்ணன் த/பெ.அர்த்தனாரி,<br>42எ,செல்லியாண்டியம்மன் கோவில் தெரு, இடைப்பாடி. | ரூ.1600 | ரூ.1700<br><br><br>ரூ.1500 |
| 4. | TUFIDCO கடை எண்.72<br><br><br><br>TUFIDCO கடை எண்.72 | திரு.அ.முரளி கிருஷ்ணன் த/பெ.அர்த்தனாரி,<br>42எ,செல்லியாண்டியம்மன் கோவில் தெரு, இடைப்பாடி<br><br>திரு. திரு.ந.சுகவனேஸ்வரன் த/பெ.நல்லுபக்தர்,<br>74,க.புதூர் பழைய தெரு, இடைப்பாடி. | ரூ.1650 | ரூ.1702<br><br><br><br>ரூ.1400 |
| 5. | TUFIDCO கடை எண்.74<br><br><br><br>TUFIDCO கடை எண்.74 | திருமதி.பி.கற்பகம் க/பெ.செந்தில்குமார்.<br>64ஈ,ஆ.காட்டூர், இடைப்பாடி.<br><br>திரு.எம்.அய்யாசாமி த/பெ.முனியன்,<br>43,ஆலச்சம்பாளையம் காட்டூர், இடைப்பாடி. | ரூ.1720 | ரூ.1790<br><br><br><br>ரூ.1400 |

<u>அலுவலககுறிப்பு</u>

1. வரிசை எண்.1ல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் கடை எண்.43க்கு வரிசை எண்.1ல் கொடுத்துள்ள திரு.வி.குப்புராஜ் த/பெ.வேம்பாகவுண்டர் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
2. வரிசை எண்.2ல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் கடை எண்.56க்கு வரிசை எண்.1ல் கொடுத்துள்ள திரு.எஸ்.முத்துபாரதி த/பெ.சேட்டு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளது. மேலும் இக் கேள்வியானது பழைய வாடகையை விட அதிகமாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
3. வரிசை எண்.3ல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் கடை எண்.71க்கு வரிசை எண்.1ல் கொடுத்துள்ள திரு.ந.சுகவனேஸ்வரன் த/பெ நல்லுபக்தர் என்பவரின்

உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

4. வரிசை எண்.4ல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் கடை எண்.72க்கு வரிசை எண்.1ல் கொடுத்துள்ள திரு.அ.முரளிகிருஷ்ணன் த/பெ.அர்த்தனாரி என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
5. வரிசை எண்.5ல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் கடை எண்.74க்கு வரிசை எண்.1ல் திருமதி பி.கற்பகம் க/பெ. செந்தில்குமார் என்பவரால் கொடுக்கப்பட்ட உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
6. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 12 மாத வாடகையினை முன்பணமாக செலுத்த உச்ச ஒப்பந்த கேள்விதாரருக்கு அறிவிப்பு வழங்கியமைக்கும் மன்ற அனுமதி எதிர்நோக்கி உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு கடையினை ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**(ந.க.எண்.43/2021/பி4)**

**<u>பொருள்18</u>**

இடைப்பாடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாட சாமான்கள் சப்ளை செய்ய 04.04.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி 20.04.2022ந் தேதி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது அதன் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ. எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | Foster Medical Deices Pvt Ltd Ashok Nagar Chennai | First Agro Services & Trading Metha Nagar Chennai |
|---|---|---|---|---|
| 1. | குப்பை சவுல் | 1 எண்ணிக்கை | ரூ 380 | ரூ 410 |
| 2. | சாக்கடை சவுல் (சிறியது) | 1 எண்ணிக்கை | ரூ 330 | ரூ 350 |
| 3. | சாக்கடை சவுல் (பெரியது) | 1 எண்ணிக்கை | ரூ 480 | ரூ 530 |
| 4. | நாலு பல்கொக்கி | 1 எண்ணிக்கை | ரூ 490 | ரூ 520 |
| 5. | கை அறிவாள் | 1 எண்ணிக்கை | ரூ 185 | ரூ 240 |
| 6. | மூங்கில்கூடை | 1 எண்ணிக்கை | ரூ 280 | ரூ 320 |
| 7. | மண்வெட்டி | 1 எண்ணிக்கை | ரூ 380 | ரூ 425 |
| 8. | பிளாஸ்டிக் குண்டா | 1 எண்ணிக்கை | ரூ 150 | ரூ 175 |
| 9. | மூங்கில் குச்சி | 1 எண்ணிக்கை | ரூ 140 | ரூ 148 |
| 10. | விளக்குமார் | 1 எண்ணிக்கை | ரூ 90 | ரூ 105 |
| 11. | அலுமினிய குண்டா | 1 எண்ணிக்கை | ரூ 375 | ரூ 390 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | ரோடு கூட்டும் பிரஸ் கட்டைகைப்பிடியுடன் | 1 எண்ணிக்கை | ரூ 220 | ரூ 240 |
| 13. | கடப்பாறை | 1 எண்ணிக்கை | ரூ 870 | ரூ 920 |
| 14. | பக்கெட் (10 லிட்டர்) | 1 எண்ணிக்கை | ரூ 650 | ரூ 672 |
| 15. | பிரஸ் (பாத்ரூம்) | 1 எண்ணிக்கை | ரூ 200 | ரூ 220 |
| 16. | சீமார் (மிளார்) | 1 எண்ணிக்கை | ரூ 30 | ரூ 35 |
| 17. | இரும்பு சட்டி | 1 எண்ணிக்கை | ரூ 195 | ரூ 210 |
| 18. | கருக்கு அரிவாள் | 1 எண்ணிக்கை | ரூ 360 | ரூ 380 |
| 19. | பல்கொக்கி சிறியது | 1 எண்ணிக்கை | ரூ 290 | ரூ 305 |
| 20. | ஆசிட் (கழிப்பிடம்) | 1 லிட்டர் | ரூ 48 | ரூ 52 |
| 21. | கையுரை(ரப்பர்) | 1 எண்ணிக்கை | ரூ 140 | ரூ 150 |
| 22. | கையுரை (துணி) | 1 எண்ணிக்கை | ரூ 35 | ரூ 40 |
| 23. | ஒளிரும் ஜாக்கெட் | 1 எண்ணிக்கை | ரூ 250 | ரூ 275 |
| 24. | பினாயில் | 1 லிட்டர் | ரூ 63 | ரூ 68 |
| 25. | நீர்த்த சுண்ணாம்பு தூள் | 1 கிலோ | ரூ 9 | ரூ 11 |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் Foster Medical Deices Pvt Ltd Ashok Nagar Chennaiஎன்ற நிறுவனம் மற்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியைவிட குறைவாக உள்ளதை ஏற்று Foster Medical Deices Pvt Ltd Ashok Nagar Chennai என்ற நிறுவனத்திற்கு மேற்படி பொருட்கள் சப்ளை செய்ய உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 306 / 2022 /எச்1)**

**<u>பொருள்19</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு TATA ACE. TN.52.K.9398–ல் பழுதடைந்து வாகனம் இயக்க மிகவும் சிரமமாக உள்ளதால் பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்க மேற்படி வாகனத்தின் பழுதுகள் சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ15000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 307/ 2022 /எச்1)**

**<u>பொருள்20</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு TATA ACE. TN.52.K.7428–ல் பழுதடைந்து வாகனம் இயக்க மிகவும் சிரமமாக உள்ளதால் பொது சுகாதார பணிகள்

பாதிப்படையாமல் இருக்க மேற்படி வாகனத்தின் பழுதுகள் சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ10000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 409 / 2022 / எச்1)**

**பொருள்21**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு TATA ACE.TN.52.M.8250—ல் 4டயர்களும் பழுதடைந்து வாகனம் இயக்க மிகவும் சிரமமாக உள்ளதால் பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்க மேற்படி வாகனத்தின் பழுதடைந்த 4டயர்கள் மற்றும் டியூப்கள் புதிதாக மாற்ற ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ15000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 310 / 2022 / எச்1)**

தலைவர்,
இடைப்பாடி நகர்மன்றம்.